# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்
முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.

முன்னிலை: மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப.(ஓ)

*******

ஆணை எண். 74 /மா/2021
நாள். 27. 11.2021

திரு கே.கிருஷ்ணமூர்த்தி,
கோயம்புத்தூர் – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

உதவி ஆணையாளர்,
கிழக்கு மண்டலம்,
கோயம்புத்தூர் மாநகராட்சி – எதிர்மனுதாரர்கள்

கோயம்புத்தூர் மாநகராட்சி, மசக்காளிபாளையம், உப்பிலிபாளையம் அஞ்சல், எண்.60, ஸ்ரீமூகாம்பிகைநகர் என்கிற முகவரியில் வசிக்கும் திரு கே. கிருஷ்ணமூர்த்தி அவர்களின்18.08.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.08.2021 அன்று பெறப்பட்டு, 74/2021 என எண்ணிடப்பட்டு, முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கோயம்புத்தூர் மாநகராட்சி, மசக்காளிபாளையம், உப்பிலிபாளையம் அஞ்சல், எண்.60, ஸ்ரீமூகாம்பிகைநகர், என்கிற முகவரியில் வசிக்கும் திரு கே. கிருஷ்ணமூர்த்தி என்பவர் தனது முறையீட்டு மனுவில், கோவை மாநகராட்சி, கிழக்குமண்டலத்தில், வார்டு எண்.57, ஸ்ரீமூகாம்பிகை நகர் அமைந்துள்ளது. இந்த நகரில் 72 மனைப்பிரிவுகள் உள்ளது. இந்த நகரின் பொது ஒதுக்கீட்டு இடமாக சர்வே எண் (142/2) 1.24 ஏக்கர் உள்ளது. இந்த இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகள் குறித்து மாநகராட்சி அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தும், 22.04.2021, 29.06.2021, 09.08.2021–ம் தேதியிட்ட கடிதங்கள் அனுப்பியும் நடவடிக்கை ஏதும் இதுவரை எடுக்கப்படவில்லை. இந்த மனுக்கள் மீது நடவடிக்கை ஏதும் எடுக்காததால் மேல் முறையீடு செய்வதாகவும், தங்கள் மனுவினை பரிசீலித்து பொது ஒதுக்கீட்டு இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி அளவீடு செய்து பொதுமக்கள் மற்றும் பெண்கள், குழந்தைகளின் பாதுகாப்புக்காக கம்பி வேலி அமைத்தும், பொது உபயோகத்திற்காக நடைபாதை அமைத்து தருமாறும் இம்முறை மன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களான மாநகராட்சிஆணையாளர், கிழக்கு மண்டல உதவி ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி ஆகியோர்களும் 25.10.2021 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 06.10.2021 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. முறையீட்டு மனுதாரர் 25.10.2021 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

“ கோயம்புத்தூர் மாவட்டம், ஸ்ரீமூகாம்பிகை நகர் குடியிருப்புப் பகுதியில் பொது ஒதுக்கீட்டு இடமாக (சர்வே எண்.142/2), 1.24 ஏக்கர் OSR நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது குறித்து கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலர்களிடம் புகார் தெரிவித்தும் இன்று வரை நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. மேற்கண்ட திறந்தவெளி இடத்தில் ஷெட் போடப்பட்டு வாடகைக்கு விட்டுள்ளனர். இது தொடர்பாக புகார் மனு அளித்திருந்தும் மாநகராட்சியால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே மேற்கண்ட ஆக்கிரமிப்புக்களை அகற்றி மாநகராட்சி வசம் எடுத்து வயதானவர்கள் நடைபயிற்சி செல்வதற்கும், குழந்தைகள் விளையாடுவதற்கும் வசதியாக பூங்கா அமைத்து பொதுமக்கள் பயன்படுத்த வழிவகை செய்திடுமாறு இம்முறை மன்ற நடுவத்தை வேண்டிக் கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

3. இந்நிகழ்வில் 25.10.2021 அன்று விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்த கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் மற்றும் உதவி ஆணையாளர் இருவரும் வேறொரு அவசர வேலையை முன்னிட்டு இம்முறை மன்ற நடுவத்தில் நேரடியாக ஆஜராக இயலாத காரணத்தால், அவர்களின் சார்பாக கோயம்புத்தூர் மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் ( திட்டம்) அவர்கள் 25.10.2021 அன்று விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

" கோயம்புத்தூர் மாவட்டம் வார்டு எண்.57, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட உப்பிலிபாளையம், ஸ்ரீமூகாம்பிகை நகர் S.F. No, 142/2, 143/2 and 144/2 பகுதி OSR நிலம் ஆக்கிரமிப்பாளர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது. மேற்கண்ட மாநகராட்சி இடத்தில் ஆக்கிரமிப்பாளர்களால் பூமி பூஜை செய்யவிருந்ததை மாநகராட்சியால் தடுத்து நிறுத்தப்பட்டு, அவ்விடத்தில் மாநகராட்சி ஒப்பந்தப் பணியாளர்கள் தங்குவதற்காக, மாநகராட்சி அனுமதியுடன் ஒப்பந்தப் பணியாளர்களால் தற்காலிக ஷெட் போடப்பட்டு அப்பணியாளர்கள் அங்கு தங்கியுள்ளனர். மேற்கண்ட இடத்திற்கு அருகே, " இவ்விடம் மாநகராட்சிக்குச் சொந்தமானது " என்கின்ற விவரங்கள் அடங்கிய பலகையும் பொருத்தப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மேற்கண்ட இடத்தில் ஏதேனும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தால் அதனை அகற்றிடவும், மேற்கண்ட இடத்தில் ஆக்கிரமிப்பாளர்களால் வாடகைக்கு விடப்பட்டிருந்தால் அதனை மாநகராட்சியால் அகற்றப்படும் என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மேற்கண்ட பொருள் தொடர்பான மாநகராட்சி ஆணையாளரின் 06.10.2021 நாளிடப்பட்ட அறிக்கையை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4. கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் தனது 06.10.2021 நாளிட்ட விரிவான அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

" 1981 ஆம் ஆண்டு உப்பிலிபாளையம் பகுதியில் ஸ்ரீமூகாம்பிகை நகரில் 7.42 acres formed in S.F.No.142/2, 143/2 and 144/2 அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள் உருவாக்கப்பட்டன. 2018 ஆம் ஆண்டு இந்த மனைபிரிவு கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழும உறுப்பினர் செயலரால் வரைமுறைப்படுத்தப்பட்டது. (S.P.F.No.1809/2018 நாள். 10.04.2018) இந்த மனைபிரிவில் கீழ்க்கண்ட பரப்பளவில் பொது உபயோகத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது:

1. கடைகளுக்காக (shop site) 8 செண்ட் 22 சதுர அடி

2. குடியிருப்புமனைகள்(owners plot) 21 செண்ட் 77 சதுர அடி

3. OSR 1 ஏக்கர் 37 செண்ட் 100 சதுர அடி

4. சாலைக்காக 83 செண்ட் 102 சதுர அடி

அரசாணை எண் 172, வீட்டுவசதி மற்றும் நகரப்புற வளர்ச்சி துறை நாள் 13.10.2017–ன்படி மேற்கண்ட பொது உபயோகத்திற்கான இடம் (வரைமுறைபடுத்தப்பட்ட பின்) மாநகராட்சி வசம் வந்தது. தலைவர், ஸ்ரீமூகாம்பிகைநகர் அவர்களின் 22.04.2021 நாளிட்ட மனு தொடர்பாக ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்க இருந்தபொழுது, மேற்கண்ட மாநகராட்சி இடத்தில் ஆக்கிரமிப்பாளர்களால் பூமி பூஜை செய்வதாக தகவல் வந்ததை அடுத்து துரிதகதியில் மாநகராட்சி அலுவலர்கள் அவ்விடத்திற்கு விரைந்து சென்று ஆக்கிரமிப்பு தடுத்து நிறுத்தப்பட்டு இவ்விடம் மாநகராட்சிக்குச் சொந்தமானது என்கின்ற விவரங்கள் அடங்கிய பலகை ஸ்ரீமூகாம்பிகை நகர் குடியிருப்போர் நலச்சங்கம் அலுவலர் முன்னிலையில் பொருத்தப்பட்டது. மேலும் அவ்விடத்தில் மாநகராட்சி ஒப்பந்த பணியாளர்கள் தங்குவதற்காக மாநகராட்சியின் அனுமதியுடன் தற்காலிக ஷெட் போடப்பட்டு அப்பணியாளர்கள் அங்கு தங்கியுள்ளனர். மேலும் நிதி ஆதாரத்தைப் பொறுத்து தடுப்புச் சுவர் அமைத்து மக்களின் பயன்பாட்டிற்கு வழிவகை செய்யப்படும்'' என தெரிவித்துள்ளார்.

5. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் (திட்டம்) ஆகியோரது வாக்குமூலம் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

6. முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள புகார் தொடர்பாக கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் தனது அறிக்கையில் மாநகராட்சி இடத்தில் ஆக்கிரமிப்பாளர்களால் பூமி பூஜை செய்யவிருந்ததை தடுத்து நிறுத்தப்பட்டு விட்டதாகவும், மேலும் அவ்விடத்தில் மாநகராட்சி ஒப்பந்தப்பணியாளர்கள் தங்குவதற்காக, மாநகராட்சியின் அனுமதியுடன் ஒப்பந்தப்பணியாளர்களால் தற்காலிக ஷெட் போடப்பட்டு அப்பணியாளர்கள் அங்கு தங்கியுள்ளனர் எனவும், மேலும் இவ்விடம் மாநகராட்சிக்குச் சொந்தமானது என்கின்ற விவரங்கள் அடங்கிய பலகையும் பொருத்தப்பட்டுள்ளது என்றும்

தெரிவித்து, மாநகராட்சிக்கு சொந்தமான பொது பயன்பாட்டிற்கான இடத்தில் ஆக்கிரமிப்புகள் ஏற்படாவண்ணம் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், மேலும் நிதி ஆதாரத்தை பொறுத்து தடுப்புச்சுவர் அமைத்து மக்களின் பயன்பாட்டிற்கு வழிவகை செய்யப்படும் என்று உறுதி அளித்துள்ளதை ஏற்று இந்நேர்வின் மீதான நடவடிக்கையை முடித்துக் கொள்ளலாம் என முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

இனி வரும் காலங்களில் பொது பயன்பாட்டிற்கான மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் ஆக்கிரமிப்புகள் ஏதும் நிகழாவண்ணம் செயல்படுமாறும் அவ்வாறு நிகழ்ந்தால் ஆக்கிரமிப்பாளர்கள் மீது சட்டவிதிகளின்படி உரிய நடவடிக்கை எடுக்குமாறும் மாநகராட்சி நிர்வாகம் அறிவுறுத்தப்படுகிறது.

2021 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 27–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு கே. கிருஷ்ணமூர்த்தி,
தலைவர்,
ஸ்ரீமூகாம்பிகை நகர் குடியிருப்போர் நலச்சங்கம்,
60, ஸ்ரீமூகாம்பிகை நகர்,
மசக்காளிபாளையம் சாலை,
உப்பிலிபாளையம்,
கோயம்புத்தூர் – 641 015.

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர் – 641 001.

உதவி ஆணையாளர்,
கிழக்கு மண்டலம்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர் – 641 005.

நகல்

மாண்புமிகுமுறைமன்ற நடுவர் அவர்களின் தனிச்செயலர்

இ.கோ/உதிரிகள்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்